★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office,
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 14 ஷவ்வா 6 இதழ் 199
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-8-79

**துரித மீட்டல் வகுப்புகள்**

G. C. E. A/L 1980 ஏப்ரல்

- சனி, ஞாயிறு வகுப்புகள்
- காலை முழுநேர வகுப்புகள்

ஆரம்பம் 1-9-79

லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

## இறுதி 'டெஸ்ட்' இன்று ஆரம்பம்

லண்டன், ஆக. 29

இந்திய—இங்கிலாந்து 4வது இறுதி கிரிக்கட் டெஸ்ட் நாளை வியாழக்கிழமை லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதுவரை நடைபெற்ற மூன்று டெஸ்ட்களில் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து இன்னிங்ஸால் வெற்றிபெற்றது. ஏனைய இரண்டு டெஸ்டுகளும் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது தெரிந்ததே. (இ)

RECEIVED
1979-8-30
PERIODICALS DIVISION
LIBRARY

# முன்கூட்டியே சோலைவரி செலுத்தினால் 10 வீதக் கழிவு

## மேலதிகவரி அதிகரிக்கும்

### மாநகர, நகரசபைகளுக்கு புதிய அதிகாரம்

(கொழும்பு) சோலைவரியை முன்கூட்டியே செலுத்தி விடும் வரியிறுப்பாளர்களுக்கு கழிவு வழங்கும் அதிகாரம் மாநகரசபைகளுக்கும் நகர சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சோலைவரியை உரிய காலத்தில் செலுத்தாதவர்களுக்கு விதிக்கப்படும் வரியை அதிகரிக்கவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக மதிப்பீட்டு வரிகளைச் செலுத்தி விடுகிறவர்களுக்கு மொத்த தொகையிலிருந்து 10 சதவீத கழிவு வழங்கப்படும்.

முதலாவது மாதத்திலேயே அரையாண்டு அல்லது காலாண்டு வரியைச் செலுத்துகிறவர்களுக்கு 5 சதவீத கழிவு வழங்கப்படும்.

வரிகளை உரிய காலத்தில் செலுத்தாதவர்களுக்கு 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வெற்று காணிகளுக்கு வீதங்களுக்கும் இது பொருந்தும். ஏனைய உடைமைகளுக்கான மேலதிகக் கட்டணம் 10 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பஸ் குடை சாய்ந்தது: ஒருவர் பலி, 15 பேர் காயம்

(யாழ்ப்பாணம்) கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் பாதையை விட்டு விலகிக் குடைசாய்ந்தது. இவ்விபத்தில் ஒருவர் மரணமானார். பதினைந்துபேர் காயமடைந்தனர்.

மரணமான சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லையா ஸ்ரீதரனின் மரண விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

பஸ்ஸில் பிரயாணம் செய்த சுந்தரலிங்கம் என்பவர் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

மரணமான செல்லையா சிறீதரன் முறிகண்டியிலுள்ள ஒரு தேநீர்க்கடையில் வேலைசெய்து வந்ததாகவும் சம்பவதினம் சாவகச்சேரிக்குச் செல்வதற்காக முறிகண்டியிலிருந்து பஸ்ஸில் ஏறியதாகவும் பஸ் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கையில் 155-ம் கட்டையை நெருங்கிக் கொண்டிருக்கும்போது பஸ்ஸில் ஏதோ ஒரு பெரிய சத்தம் கேட்டு, பஸ்-பாதையை விட்டு விலகி வலதுபக்கமாக ஓடி வீதியின் ஓரத்தில் உள்ள

[6-ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதிக்கு பண்டிதர் தந்தி

(யாழ்ப்பாணம்) யாழ் மாவட்டத்தில் வேலை வழங்கும் முறையை மாற்றி தகுதி அடிப்படையில் வேலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை எம்.பி பண்டிதர் கா.பொ.இரத்தினம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இது குறித்து பண்டிதர் ஜனாதிபதிக்கு அவசரத்தந்தியொன்றையும் நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார். (இ)

## அபிவிருத்தி பாதிப்பதாக யாழ். மேயர் கவலை

(யாழ்ப்பாணம்) அரசின் அசட்டையினால்தான் யாழ் நகர அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகிறது; 900 தார் பீப்பாக்கள் கேட்டோம். 600 தருவதாக சொன்னார்கள். தற்போது 240 தார் பீப்பாக்கள் மட்டும் தந்துள்ளனர். இவற்றை வைத்துக் கொண்டு அபிவிருத்தி செய்ய முடியுமா?

யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சபையின் அனுமதியுடன் திரு என். ரி. செல்லத்துரை

[6-ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

மணமகன்:- ஆறுமுகம் குணரத்தினம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மணமகள்:- ஆறுமுகம் தியாகேஸ்வரி

காலம்:- 1-9-1979 சனிக்கிழமை
மாலை 5-30 – 7-03

இடம்:- மாவடிப்பிள்ளையார் கோவில் மீசாலை

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி அம்பலவாணர்,
திரு. திருமதி சின்னத்துரை,
திரு. திருமதி சபாரட்னம்.
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி

திரு. திருமதி ஆறுமுகம்
(மணமகளின் பெற்றோர்)
சாவகச்சேரி வடக்கு
மீசாலை

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.)

3443

## திருமண அழைப்பு

மணமகன்: மா. இரட்ணலிங்கம்
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்
நீர்ப்பாசனத் திணைக்களம்-கிளிநொச்சி)

மணமகள்: க. கோகுலவாணி

இடம்: நல்லூர் கந்தசுவாமிகோவில்.

காலம்: 1-9-1979 சனிக்கிழமை பிற்பகல்
5-30—7-03 மணி.

உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்று, திருமணவைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தவிர்க்க முடியாத காரணங்களால் தனித்தனி அழைப்புக்கள் அனுப்ப முடியவில்லை.

திரு. செ. கனகசபாபதி.
(இளைப்பாறிய பதிவாளர்,
யாழ் பல் தொழில் நுட்ப
நிறுவனம், யாழ்ப்பாணம்.)
C. M. S. ஒழுங்கை கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

திருமதி பா. மாணிக்கம்
"மாணிக்கம்"
அரசடி,
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

3448

மக்கள் சேவையில் எமது மகத்தான புதிய பணி...

வீடுகள்
கட்டிடங்கள்
தொழிற்சாலைகள்...

போன்ற சகலவிதமான நிர்மாண வேலைகட்கு தேவையான-
இரும்பு கம்பிகள், ஆணி வகைகள்
இரும்பு-தகர, அலுமினிய-கல்வனைஸ்ட் தகரங்கள்
இரும்புப் பட்டங்கள், போல்ட் & நட்ஸ் வகைகள்
S-LON எஸ்லோன் பைப் வகைகள், இணைப்புக்கள்
மற்றும் உங்கள் சகலவித இரும்புத் தேவைகட்கும்....

உங்களை அழைக்கிறோம்--

# கல்கிசன்ஸ்

147. ஸ்ரான்லிவீதி (தொலைபேசி-7711) யாழ்ப்பாணம்.

## நன்றி நவிலல்

திரு. R. S. S. மணியம் அவர்கள் (உரிமையாளர், மணியம் ஸ்ரோர்ஸ், 75, குமார வீதி, புறக்கோட்டை) 16-08-79 அன்று சிவபதமடைந்ததை முன்னிட்டு நேரில் சமுகமளித்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும் அன்னாரின் ஈமக்கிரியைகளைச் சிறப்பித்த சகலருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி நா. சிவசுப்பிரமணியமும் பிள்ளைகளும்.
38, இளிபோர்ட் பிளேஸ், பம்பலபிட்டி 3444

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான ஆதனம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம் ஈடு 278

1. தீ. அ. இராசையாபிள்ளை மகள் பெண் எலிசபெத் முத்தம்மா, சரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.

வழக்காளி

எதிராக

1. முத்துக்குமாரு இராமலிங்கம்
2. பெண் பொன்னு (இறந்துவிட்டார்) சரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.

எதிராளிகள்

1. முத்துக்குமாரு இராமலிங்கம்
2. இராசையா சண்முகலிங்கம் பெண் யோகேஸ்வரி
3. இராசையா சண்முகலிங்கம்
4. இராமலிங்கம் சபாநாதன்
5. இராமலிங்கம் சண்முகநாதன்
6. இராமலிங்கம் யோகநாதன்
7. இராமலிங்கம் மகள் கமலேஸ்வரி
8. இராமலிங்கம் நாதன் எல்லோரும் சரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை

மேற்கூறிய 1-ம் எதிராளி காலஞ்சென்ற 2-ம் எதிராளியின் ஆதனத்துக்கு சட்டப்பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்கூறிய 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம் எதிராளிகள் காலஞ்சென்ற 2-ம் எதிராளியின் பிள்ளைகள், இவர்களை மேலதிக எதிராளிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் மற்றும் 6-ம், 7-ம், 8-ம் எதிராளிகள் பராயமற்றவர்கள் இவர்களுக்கு பாதுகாவலராக மேற்கூறிய 4-ம் எதிராளியை பாதுகாவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 278-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18-ந் திகதி (18-9-79) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 7000/-ம் மேலும் ரூபாய் 3,500/-க்கு வருடமொன்றுக்கு 18 வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 8-10-76 தொடக்கம் 24-3-77 வரைக்கும் வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 581-10 சதம், அத்துடன் நியமன செலவு ரூபா 450-26ம் சேர்த்து கொடுக்கப்படவேண்டும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரம்பன் இறை பத்தன்சீமாலும் பாலித்தன்சீமால் செய்யாயும் நில பர. 7, கிணறும் பனைகள் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு இராசையா பெண் ரூபவதியின் ஆதனம், வடக்கு இராசையா பெண் ரூபவதிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு நாகமுத்து தம்பையாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு வஸ்தியாம்பிள்ளை பெண் அந்தோனிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் நில. பர. 6ம் இதற்குச் சேர்ந்தவைகளும் முற்பதிவு C 22/121.

ப. நா. தருமலிங்கம்,
கொமிஷனரும், ஏலவிற்பனையாளரும்;
167/1, கோவில் வீதி, நல்லூர்,
13-8-79. 3438

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் மண்டலாபிஷேக விழாவின் 46வது நாளான இன்று பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையும் அதனைத் தொடர்ந்து "மோட்சத்தை நாடுங்கள்" என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ இ. சு. பிரமணிய சாஸ்திரிகளின் சொற்பொழிவும் இடம் பெறும். மாலை 6-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று சுவாமி உள் வீதி வருதலும் நடைபெறும். (கொ)

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் திருத்த வேலைகளுக்கு கல் விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை 29-08-79-ந் திகதி தொடக்கம் 03 09 79-ந் திகதி வரைக்கும் பூநகரி நிறைவேற்றும் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை 07-09-79 ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கண்டி - யாழ்ப்பாணம் வீதி 164-ம் கட்டைக்கு கல் விநியோகம்
2. கண்டி - யாழ்ப்பாணம் வீதி 165-ம் கட்டைக்கு கல் விநியோகம்
3. கண்டி - யாழ்ப்பாணம் வீதி 166-ம் கட்டைக்கு கல் விநியோகம்
4. விக்சன் வீதி 1-ம் கட்டைக்கு கல் விநியோகம்
5. விக்சன் வீதி 2-ம் கட்டைக்கு கல் விநியோகம்
6. பரந்தன் - பூநகரி வீதி 4-ம் கட்டைக்கு கல் விநியோகம்
7. முறிகண்டி - அக்கராயன் - வன்னேரிக்குளம் வீதி 8-ம் கட்டைக்கு கல் விநியோகம்
8. முறிகண்டி - அக்கராயன் - வன்னேரிக்குளம் வீதி 9-ம் கட்டைக்கு கல் விநியோகம்
9. வட்டக்கச்சி புளியம்பொக்கணை வீதி ($3\frac{1}{4}$, 4-ம்) கட்டைகளுக்கு கல் விநியோகம்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஒப்பம்
சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.
திகதி: 27-08-79. 3442

## விற்பனைக்கு

ஒரு பரப்புக் காணி இரண்டு அறை வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 45,000 விபரங்கட்கு: வே. சுப்பையா, சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர். 8433

சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, மிக நல்லநிலையிலுள்ள மொறிஸ் மைனர், Lancia Fulvia கார்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்: "இரத்தினவாசா" 71/10, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 3446

## பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங் றேடியோ (Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாமிசோல் வீதி, யாழ்ப்பாணம். 3369

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 03-09-79 ம் திகதி தொடக்கம் 06-09-79 ம் திகதி வரை பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்திற்கு 11-09-79 ம் திகதி பி. ப. 2-00 மணிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் 161/3 ம் நம்பர் பாலம் திருத்தி அமைத்தலும், அகலித்தலும்.
2. கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் 161 ம் கட்டையில் தாங்கு சுவர் அமைத்தல்.
3. கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் 165 ம் கட்டையில் தாங்கு சுவர் அமைத்தல்.
4. கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் 163/1 ம் நம்பர் பாலத்திற்கு அருகாமையில் தாங்கு சுவர் அமைத்தல்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்புகொள்ளவும்.

ஒப்பம்
சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்
27-08-79. 3441

## வரி விளம்பரம்

### தேவை

சிறிய BAI குடும்பத்துக்கு யாழ் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு தேவை. அறிய தரவும் சிரெக்ஸ் 24B, பெரிய கடை, யாழ்ப்பாணம். 3445

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கு ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்களால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை 03-09-79 ம் திகதியிலிருந்து 07-09-79 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேற்படி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 14-09-79 ம் திகதி பிற்பகல் 2-00 மணிவரை பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. யாழ் - மானிப்பாய் - காரைநகர் வீதி 16 வது கட்டையில் கல் விநியோகம் செய்தல்.
2. காரைநகர் சுற்று வீதி 3 வது, 4 வது கட்டைகளுக்கு கல் விநியோகம் செய்தல்.
3. வடலியடைப்பு மழுவை வீதியில் 3/4 கட்டையிலிருந்து $1\frac{1}{2}$ கட்டை வரைக்கும் கல் விநியோகம் செய்தல்.

மேலும் விபரங்களுக்கு ஊர்காவற்றுறைப் பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஒப்பம்
எஸ். கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.
24-08-79. 3440

## வருடாந்த உற்சவம்

(கைலாசம்)

கைலாசம் நீலியம்பனைப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் சென்ற 26ந் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அடுத்த மாதம் 5ந் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது. இரவு விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# ஏ. பவர் அன்ட் கொம்பனி லிமிடட்

ஏ.பவர் அன்ட் கொம்பனி லிமிடட் நிறுவனத்தார் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தமது யாழ்ப்பாணக் கிளையை, மணிக்கூட்டுக்கோபுரவீதி, 5-ம் இலக்கத்தில் திறக்கும் செய்தியைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றுர்கள். இந்தஸ்தாபனம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மொத்த விற்பனையாளருக்கு ஒரு மொத்தவிற்பனே ஸ்தாபனமாக விளங்கும். அத்துடன் ஒரு சில்லறை விற்பனே ஸ்தாபனமாகவும் செயலாற்றும். உரம், விவசாய ரசாயனப் பொருட்கள், தெளிகருவிகள், ஒவல்டின், துணிச்சாயங்கள், மின்விசிறிகள், ஜேக்கப் விஸ்கோத்துக்கள் முதலான எம்மிடமுள்ள எல்லாப்பொருட்களையும் இந்தஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 3417

## முருகன் கோவில் செல்வச்சந்நிதி நிர்வாகம்

# வேண்டுகோள்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் சார்பாக எந்தத் தனிநபர்களோ அன்றி மன்றங்களோ ஆலயத்துடன் தொடர்புள்ளவர்களோ பொது மக்களிடமிருந்து நிதி திரட்டுவதற்கு அல்லது பணங்கள் சேகரிப்பதற்கு நிர்வாகம் அனுமதிக்கவில்லை. நன்கொடைகள் அல்லது தர்மப்பணிகள் வழங்க விரும்புவோர் ஆலய நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம். ஆலயம் சார்பாக நிதியோ பொருளோ திரட்டவேண்டிய அவசியம் இல்லை.

உலக குருநாத ஐயர்
ஆலய நிர்வாகி 3366

## மக்கள் கருத்து

### கைத்தறிப் புடவைகளின் இன்றைய நிலைமை

அரசாங்கத்தின் "தாராள" இறக்குமதிக் கொள்கையால் உள்ளூர் கைத்தறிப் புடவைகளின் நிலைமை படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தாராள இறக்குமதி மூலம், நாட்டு மக்களின் மோகம் வெளிநாட்டுப் புடவைகளின் மீது இப்பொழுது திரும்பியுள்ளது.

ஆரம்பகாலத்தைவிட இன்று நம்நாட்டில் தரமான கைத்தறிப்புடவைகள் உற்பத்திசெய்யப்படுகின்றன எனும் உண்மையை யாரும் மறுக்க முடியாது. இதன். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற" கைத்தறிப் புடவை பொருட்காட்சியில்" காணக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டுத் தயாரிப்புகளோ என்று எண்ணக்கூடிய விதத்தில் அங்கு காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தது வாய், சேலை, பெட்சீட், சாரம், சேட்டுகள், வேட்டி போன்றவற்றை காணக்கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும், அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால், வெளிநாட்டுப் புடவைகள் நம்நாட்டு கைத்தறிப் புடவைகளின் விலையைவிட குறைவாக கிடைக்கின்றதால் மக்கள் "வெளிநாட்டான் மீது" மோகம் கொள்கின்றனர்.

கைத்தறித் துணி வீழ்ச்சியால் இன்று நாட்டின் பல்வேறு இடங்களிலும் இயங்கிவரும் நெசவு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இன்னும் மூடப்படவேண்டிய அபாய நிலை தோன்றியிருக்கின்றது. இதனால், அதுவே "தஞ்சம்" என்று வேலை செய்துவரும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் படுமோசமாகப் பாதிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் உள்ளூர் கைத்தறிப் புடவைகளுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடிய அபாயநிலையை எதிர்நோக்க வேண்டியதாகவுமிருக்கிறது; அத்துடன் தற்பொழுது "எதிர்நீச்சல்" போட்டு இயங்கிவரும் நெசவு நிலையங்களில் பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான புடவைவகைகள் விற்கமுடியாத நிலையிலும் தேங்கியுள்ளன! இவற்றை விற்பனை செய்வதற்கு சங்கம் படும் கஷ்டங்களோ அளவிடமுடியாது! காலகதியில் அந்த வேலை செய்த தொழிலாளர்களுடைய கூலியைக் கூட வழங்கமுடியாத நிலை உருவாகலாம்.

இந்தப் பயங்கர நிலையில் உள்ளூர் கைத்தறிப் புடவை உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலையை சீராக்கும் நோக்குடனும் அரசு இதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும்.

தவம்-கிருஷ்ணமூர்த்தி.
அச்சுவேலி

ஃ ஃ ஃ

### ஐவர் மட்டுமே தெரிவு

பசுவிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் 18-8-79 காலை சங்க மண்டபத்தில் பரந்தன் கூட்டுறவு அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர் திரு இ. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி சங்க இயக்குநர் சபைக்கு ஐந்து பேர் மட்டுமே பொதுச்சபையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். பத்திரிகையில் குறிப்பிட்டது போல் மற்றும் ஒன்பது பேரும் "பொதுச்சபையால் தெரிவுசெய்யப்பட்டார்கள்" என்பது தவறானது. அமைச்சர் தேவநாயகம் லமிஷன் அரசுக்குச் சிபார்சு செய்ததின்படி இப்போது ஐவர் மட்டுமே பொதுச்சபைப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும். ஒருவர் தொழிலாளர் பிரதிநிதியாகவும் ஒருவர் ஆணையாளரால் நியமிக்கப்பட்டவராகவும் மொத்தம் ஏழுபேர் கொண்ட இயக்குநர்கள் மட்டுமே பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்குத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

கொ. அஸ்ரனிஸ்லாஸ்
தாளையடி
செம்பியன்பற்று

# கூட்டுச்சேரா நாடுகள் ஹவானாவில் கூடுகின்றன

## அதன் வளர்ச்சிபற்றி ஒரு கண்ணோட்டம்

கியூபா தலைநகர் ஹவானாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் ஆறுவது மகாநாட்டை யொட்டி இக்கட்டுரை இங்கு வெளி வருகிறது.

2வது உலக யுத்தத்தின் பின்னர் உலகில், குறிப்பாக ஆசிய-ஆபிரிக்கக்கண்டங்களில் ஏற்பட்ட மாறுதல்கள், சில தேச உறவில் புதிய கொள்கை யொன்றைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின. சமாதானத்திலும் ஜனநாயகத்திலும் அக்கறை கொண்ட பல நாடுகளின் கடும் உழைப்பின் பயனாக அந்தக் கொள்கை உருவானது.

### நேரு அன்று கூறினார்...

கூட்டுச்சேராக் கொள்கையின் சிற்பிகளுள் ஒருவரான முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இதை மிகத் தெளிவாக விளக்கினார்.

"ராணுவ உடன்படிக்கைகளைப் பின்பற்றாது சகல நாடுகளுடனும் நட்புறவைக் கடைப்பிடிக்கும் கொள்கையின் சுருக்கமான விளக்கமாகவே 'கூட்டுச் சேராமை' என்ற கருத்துருவம் திகழ்கின்றது" என்றாரவர்.

2வது உலக யுத்தம் முடிவடைந்த பின்னர், புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள், தமது அபிவிருத்தி குறித்துப் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. தமது தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் இவை அக்கறைகொண்டன. தாம் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழவேண்டுமென்றும் விரும்பின. இது தொடர்பாக ஆலோசிக்க 29 நாடுகள் 1955ல் பாண்டுங்கில் கூடின. இம்மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களும் கட்டறிக்கைகளுமே கூட்டுச்சேராக் கொள்கை உருவாகக் காரணமாயின.

### முதலாவது மகாநாடு

1961ல் பெல்கிரேடில் கூட்டுச்சேரா நாடுகளின் 1வது மாநாடு நடைபெற்றது. இதில் 12 ஆசிய நாடுகளும், 11 ஆபிரிக்க நாடுகளுமாக மொத்தம் 25 நாடுகள் கலந்துகொண்டன, "மக்களுக்கிடையிலான சமாதான ஒத்துழைப்பு, அவர்களது சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான தேவை. இன்றைய உலகம் முரண்பட்ட சமூக அமைப்பைக் கொண்டிருப்பதனால் கெடுபிடி யுத்தத்திற்கும் அணுயுத்த அபிவுக்குமுள்ள ஒரேயொரு மாற்றுவழி சமாதான சகவாழ்வுக்கோட்பாடே" என்று இந்த 25 நாடுகளும் பிரகடனப்படுத்தின.

சகல நாடுகளினதும் தன்னுரிமைத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் கௌரவித்தல்; பெரிய-சிறிய நாடுகள் அனைத்திற்கும் உள்ள சமத்துவத்தை அங்கீகரித்தல், ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் இன்னொரு நாடு தலையிடாதிருத்தல், ஆக்கிரமிப்பையும், ஆக்கிரமிப்புக்கான பயமுறுத்தலையும் கைவிடுதல், முரண்பாடான விவகாரங்களுக்கு சமாதானத் தீர்வு காணுவது, காலனியாதிக்கத்தை எதிர்க்கும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு தருதல், ஐ. நா வின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் சாசனத்திற்கும் மதிப்பளித்தல் ஆகியவற்றை மாநாட்டின் கருத்துக்களே தனது கோட்பாடுகள் என்று 1வது கூட்டுச்சேரா மகாநாடு அறிவித்தது.

### இராகுலன்

### மாபெரும் சக்தியாக...

1964ல் கெய்ரோவில் நடந்த 2வது கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டில் 47 நாடுகள் கலந்துகொண்டன. தொடர்ந்து 1970ல் லூஸாகாவில் நடந்த 3வது மகாநாட்டில் 54 நாடுகளும், 1973ல் அல்ஜியர்ஸில் நடந்த 4வது மகாநாட்டில் 76 நாடுகளும், 1976ல் கொழும்பில் நடைபெற்ற 5வது மகாநாட்டில் 86 நாடுகளும் கலந்துகொண்டன. இவை, நண்பர்களும் சரி பகைவர்களும் சரி அதன் வலுவினை அங்கீகரித்துக்கொள்ளுமளவுக்குக் கூட்டுச்சேரா இயக்கம் ஒரு மாபெரும் சக்தியாக வளர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

இந்த ஐந்து மகாநாடுகளின் கருத்துக்களும் தீர்மானங்களும் உலக விவகாரங்கள் தொடர்பாக மாபெரும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், அவற்றின் மீது கணிசமான செல்வாக்கையும் செலுத்துகின்றன. இம்மாநாடுகளின் மூலம் கூட்டுச்சேரா இயக்கம் தனது நிலைபாட்டை உலக அரங்கில் உறுதியாக்கியுள்ளது. இனவாதிக்கத்தையும் நிறவெறியையும் அழித்தொழிக்கவும், ஆசிய-ஆபிரிக்க-லத்தின் அமெரிக்கக் கண்டங்களில் இன்னமும் காலனி ஆதிக்கம் நிலைகொண்டிருப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள அந்நிய ராணுவத் தளங்களை அகற்றிவிடவும் அது கடுமையாக உழைத்துவருகிறது.

### இலட்சிய நோக்கங்கள்

பொதுவானதும் பூரணமானதுமான ஆயுதப் பரிகரணம் ஏற்படவேண்டுமென்று வலியுறுத்தும் கூட்டுச்சேரா இயக்கம் பத்தோபவிலுக் கவுன்சிலையும் பொருளாதாரக் கவுன்சிலையும் விரிவாக்குவதன் மூலமும் சமதையான பிராந்திய பிரதிநிதித்துவத்தின் தேவையை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் செயலவையின் பிரதிநிதித்துவ அமைப்பினை மாற்றியமைப்பதன் மூலமும் ஐ. நா. ஸ்தாபனம் புனர் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

### ஆறுவது மகாநாடு

கூட்டுச்சேரா இயக்கத்தின் 6வது உச்சி மகாநாடு ஒரிரு தினங்களில் ஹவானாவில் நடைபெறுகிறது. இதையொட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இந்த இயக்கத்தின் இணைப்புப் பணியகத்தின் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களது கூட்டத்தின் அறிக்கை, ராணுவ அணியில் சேராமை, காலனியாதிக்கத்தை எதிர்த்தல், இனவாதத்தையும் நிறவெறியையும் எதிர்த்தல், சமாதானம், உலகப் பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தல் போன்றவற்றை வலியுறுத்திக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் ஆயுதப்பரிகரணம், சமாதான சகவாழ்வு, இணக்க அமைதி, உலகப் பொருளாதார, அரசியல் உறவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வையும் ஒதுக்குதலையும் இல்லாது செய்தல் ஆகியவற்றுக்காகவும் கூட்டுச்சேரா இயக்கம் மேற்கொண்டுள்ள பணியில் உலகின் இதர சக்திகளின் ஆதரவும் கிடைத்துள்ளது

### சரியான கோட்பாட்டில்...

கூட்டுச்சேரா இயக்கத்தின் வரலாற்றையும் வெற்றிகளையும் கவனிக்கும்போது அது சர்வதேச நிலையில் தனது செல்வாக்கை மேலும் உயர்த்தவே செய்யும் என்பது தெரியவரும். ஏனெனில் தொடக்கம் முதலே அது சரியான கோட்பாடுகளினால் வழிநடத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான நாடுகளின் ஜீவாதார நலன்களை மேன்மேலும் அனுசரித்தும் நவீன உலகின் முற்போக்கான [illegible] இந்த இயக்கமுடைய சக்திகளுடன் இணைந்தும் செயல்படுவதனால் அது வெற்றிப் பாதையில் முன்னேறும் என்பதில் சந்தேகமில்லை.

துரையப்பா விளையாட்டரங்கு:

# சபையின் தீர்மானப்படி பெயர் மாற்றப்பட்டது

## நகரமுதல்வர் பதில்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம்விளையாட்டு அரங்கு என்ற பெயர் யாழ். மாநகரசபையின் 66ம் ஆண்டு மே 17ம் தேதி நடந்த கூட்டத்தின் 7ம் தீர்மானத்தின்படி துரையப்பா விளையாட்டு அரங்கு எனமாற்றப்பட்டது" யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், துணைமுதல்வர் திரு பி. எவ். சேவியர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

அப்போது துணை முதல்வர் கேட்ட கேள்விகளுக்கு நகர முதல்வர் பதிலளித்தார்.

கேள்வி: துரையப்பா விளையாட்டரங்கு என்ற பெயர் மாற்றப்படுமுன் விளையாட்டு அரங்கின் பெயரென்ன?

பதில்: யாழ். விளையாட்டு அரங்கு.

கே: மேற்படி விளையாட்டரங்கை தாபித்தது, மாநகர சபையா அல்லது பொது மக்களை உள்ளடக்கியகுழுவா?

பதில்: பொதுமக்களை. உள்ளடக்கிய குழு

கே: மேற்படி விளையாட்டரங்கை சபையிடம் கையளித்த ஸ்தாபனத்தின் பெயர் என்ன?

பதில்: யாழ். விளையாட்டு அரங்கு கழகம்.

கே: இந்த ஸ்தாபனத்தின் அல்லது குழுவின் ஸ்தாபகத் தலைவர் பெயர் என்ன?

யாழ்: திரு. வாண்சண்டன்.

கே: விளையாட்டரங்கை அமைப்பதற்கு உபயோகிக்கப்பட்டகாணி சபையினுடைய காணியா அல்லது யாருடைய காணி?

பதில்: பொலிஸ் திணைக்களத்தின் காணி;

கே: யாழ்ப்பாணம் விளையாட்டரங்கு என்ற பெயர் தான் அதன் ஸ்தாபகர்களால் மேற்படி விளையாட்டரங்கிற்கு சூட்டப்பட்டதாயின் அந்தப் பெயரை மாற்றுவதற்கு கார

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். திறந்தவெளி அரங்கு

## பெயர்மாற்றப் பிரேரணை ஒத்திப்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கிற்கு அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் பெயர் சூட்ட வேண்டுமென்று யாழ். மாநகர சபையில் கொண்டு வரப்படவிருந்த பிரேரணை ஒத்திப்போடப்பட்டது.

இப் பிரேரணையை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்த தமிழ் காங்கிரஸ் உறுப்பினரான திரு இ மரியாம்பிள்ளை, நகர முதல்வரின் ஆலோசனைக்கிணங்க இப்பிரேரணையை ஒத்திப்போடுவதாகத் தெரிவித்தார்.

தமிழ் பேசும் இனத்தின் தலைவராகவும், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராகவும் நீண்டகாலம் இருந்தவரும், தமிழ்ப் பிரதேசத்தின் வளம் கொழிக்க தொழிற்சாலைகள் நிறுவியவரும், கடற்றொழில் அமைச்சராக இருந்து கடற்றொழிலாளர்களுக்கு பல நன்மைகள் செய்த அமரர் ஜி ஜி பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத்தில் உள்ள திறந்த வெளி பரங்கை அமரர் ஜி ஜி பொன்னம்பலம் திறந்தவெளி அரங்கு என்று பெயர் சூட்ட

[4-ம் பக்கம் பார்க்க]

# சத்தியவாணிமுத்து நிரபராதிஎன்பது பின்னரே தெரியவந்தது

## மத்திய அமைச்சராக அவர் நியமனம் பெற்றதும் நியாயமே என்கிறார் எம். ஜி. ஆர்.

சென்னை, ஆக 29

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை தமிழ் நாட்டுடன் இணைக்கவேண்டும் எனத் தாம் ஒரு போதும் எவருக்கும் யோசனை கூறவில்லை என்று தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க் கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றது என்றும் தெரிவித்த திரு. இராமச்சந்திரன், இணைப்பு விஷயத்தை யூனியன் பிரதேச மக்களின் முடிவுக்கே தாம் விட்டுவிட்டதாகவும் கூறினார்.

முதல்வர் மேலும் கூறியதாவது:-

**சத்தியவாணிமுத்துவின் நியமனம் நியாயமானது**

மத்திய அமைச்சராக திருமதி சத்தியவாணிமுத்து நியமிக்கப்பட்டது நியாயமானதே.

திருமதி முத்து முன்னர் தி மு க அமைச்சரவையில் உறுப்பினராக இருந்தபோது அவர் மீது தாம் குற்றச்சாட்டுக்கள் தெரிவித்திருந்தது உண்மையே எனினும் அக்குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றன என்பதும் அவர் நிரபராதி என்பதும் பின்னரே தெரியவந்தது

திரு. பாலா பழனூர் மத்திய அமைச்சராக நியமனம் பெற்றதைப் பாராட்டும்வகையில் காரைக்காலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே முதல்வர் திரு இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார். [இ]

## வழிப்பறிக் கொள்ளை! பனிப்புலத்தில் சம்பவம்

(சமிகாலை)

வழிப் போக்கர் ஒருவர் வழிமறிக்கப்பட்டு அவரிடமிருந்த ரொக்கப்பணமும் உடுப்புகளும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பனிப்புலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

சித்தன்கேணி டச்வீதியைச் சேர்ந்தவரும், இளவாலையில் கடமை புரிபவருமான பாலரத்தினம் சிவசுப்பிரமணியம் என்பவரே தமது பணத்தையும் உடுப்புக்களையும் பறிகொடுத்தவராவார்.

சம்பவத்தினம் சிவசுப்பிரமணியம், வேலைசெய்யும்கடையிலிருந்து இரவு சுமார் 9 மணியளவில் பனிப்புலம் ஊடாக சித்தங் கேணியை நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்ததாகவும், பனிப்புலம் பன்னமுன்னை சந்திக்கு சமீபமையில் இருவர் வீதியில் வைத்து தன்னை வழிமறித்து அரிசி கொள்முதல் செய்வதற்கென வைத்திருந்த பணத்தையும் தனது வேட்டி சேட் ஆகியவைவையும் பலவந்தமாக பறித்தெடுத்ததாகவும் சங்கானை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

விசாரணையில் ஈடுபட்ட பொலிஸ் சார்ஜன் டி எம் இலரத்ன பணிப்புலத்தைச் சேர்ந்த தர்மராசா என்பவரை சந்தேகத்தின்மீது கைது செய்து விசாரணை குட்படுத்தினர். இது சம்பந்தமாக மற்றும் ஒருவர் சந்தேகத்தின் மீது பொலிசாரால் தேடப்படுகின்றார்.

## சீனாவில் முதல் தடவையாக ஐ. நா. நிரந்தரப் பிரதிநிதி

பீக்கிங், ஆக. 29

சீனாவில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்

சீனாவில் ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டப் பிரிவின் சீனப் பிரதிநிதியாக அமெரிக்கர் ஒருவர் நியமனம் பெற்றுள்ளார். (இ)

## பொல்பொட் ஆட்சியை ஆதரிக்க முடிவு

### ஆசியன் அயல்நாட்டு அமைச்சர்கள் மகாநாட்டில் தீர்மானம்

ஜாகர்த்தா, ஆக 29

கோலாலம்பூரில் நடந்தேறிய ஆஸியான் [இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மலேஷியா, தாய்லாந்து, சிங்கப்பூர்] ஆகிய அயல்நாட்டு அமைச்சர்கள் மகாநாடு கம்பூச்சியாவில் பொல்-பொட் அரசை ஆதரிப்பதென்று முடிவு செய்துள்ளது

ஹவானா அணிசேரா உச்சி மகாநாட்டில் அணிசேரா இயக்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளும் இதை ஆதரித்து செயற்படும் என்று அறிவிக்கப்பட்டது

பொல்பொட் ஆட்சி; ஹிட்லர் சர்வாதிகாரத்தைப் போன்ற மிலேச்சத்தனமான கொலை, அட்டூழியங்களைச் செய்த ஆட்சி என்பது அங்கீகரிக்கப்பட்டாலும், அது சட்டபூர்வமான ஆட்சி என்பதே இம் முடிவுக்குக் காரணமாகும். இது குறித்து ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ள செல்வாக்கு வாய்ந்த இந்தோனேஷியாவின் 'ஒப்ஸர்வர்' பத்திரிகை தர்க்கவாதம் பயங்கரமானது என்றும், சட்டவாதம் பேசுவதாக இருந்தால் இன்று இந்தோனேஷியா சுதந்திர நாடாக இருக்க முடியாது என்றும் சட்டரீதியாக டச்சுக்காலனியல் அரசே இந்தோனேஷியாவின் அரசாக இருக்க வேண்டும் என்றும் 1945ல் நாம செய்த சுதந்திரப் பிரகடனம் செல்லுபடியாகியிராது'' என்றும் எழுதியுள்ளது

''கொலைகார பொல்பொட் ஆட்சியே சட்டபூர்வமானது என்று வாதிடுவது சுத்தப் பிரமையாகும் என்றும் ஆஸியான் நாடுகள் எடுத்துள்ள முடிவு பரிதாபகரமானது என்றும் ''இந்தோனேஷியன் ஒப்ஸர்வர்'' கண்டனம் தெரிவித்துள்ளது

## சபையின்...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

ணம் யாது?

பதில்: யாழ். மாநகரசபையின் 17-5-66ம் தேதி கூட்டத்தின் 7ம் தீர்மானத்திற்கமைய மாற்றப்பட்டது

கே: மேற்படி விதாயகர்களின் குழுவில் தலைவராக திரு துரையப்பா இடம் பெற்றிருந்தாரா?

பதில்: இல்லை.

கே: மேற்படி பெயர் மாற்றத்துக்கு சம்பந்தப்பட்ட மேற்படி விளையாட்டரங்கை நிறுவி சபையின் பொறுப்புக்கு அதனைக்கையளித்த அதன் ஸ்தாபகக்குழுவின் சம்மதம் பெறப்பட்டதா?

பதில்: இல்லை.

கே: அப்படியாயின் முறையற்றதெனக் கருதப்பட்டு செயல்படுத்தாது காலாவதியாகும்படி கைவிடப்பட்ட அத்தீர்மானத்துக்கு உயிரூட்டுவதற்கு கொண்டுவரப்பட்ட பிரேரணைக்காவது முறைப்படி முன்னறிவிப்பு தரப்பட்டதா? அப்படியாயின் விபரம் தருக?

பதில்: இல்லை.

கே: யாழ் விஜேத களியாட்டு விழா என்ற பெயரில் சபை நடத்திய களியாட்டு விழாக்கள் மொத்தம் எத்தனை?

பதில்: நான் அறிந்தவரை நான்கு. நூல் நிலையத்திற்காக மூன்று, விளையாட்டு அரங்கிற்காக ஒன்று.

கே: கடைசியாக இடம் பெற்ற யாழ். விஜேதகளியாட்டு விழா மட்டும் தோல்வியில் முடிவடையக் காரணம் மேற்படி பெயர்மாற்றத்தை பொதுமக்கள் விரும்பாமை காரணமா?

பதில்: என்னால் அபிப்பிராயம் கூற முடியாது

கே: அந்த ஒருதான் விஜேத களியாட்டு விழா மட்டும் தான் விளையாட்டரங்குக்காக நடைபெற்றதென்பதையும் அதுவும் மேற்படி பெயர்மாற்றத்தின் பின் நடைபெற்றதென்பதையும் முதல்வர் ஏற்றுக்கொள்வாரா?

பதில்: ஆம்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 14ம் திகதி

வியாழக்கிழமை

[30-8-1979]

மேடம்: இறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும். உல்வீட்டில் பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். திருப்தியற்ற தினம்.

இடபம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர் பார்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். கலஸ்திர வழியாலும் நன்மைகள் சேரும். காதலர்களுக்கு இனிப்பான தினம்.

மிதுனம்: எக்கருமத்தையும் எண்ணித் துணிக. அவசரப்போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும். வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், நிதானம் வேண்டும்

கடகம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணமும் செலவாகும். அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

சிங்கம்: தொழில் துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பல உண்டு. இசைப்படுதாவில் இன்பத்தின் மின்னல்.

கன்னி: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடம் உண்டு. உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

துலாம்: பல வழிகளிலும் தொல்லைகள் தோன்றும். விரக்திமனப்பான்மையுடன் நடமாடுவீர்கள் தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர் அவதானம் வேண்டும்.

விருட்சம்: இலட்சியக் கனவுகள் இன்று காணல் நீராகலாம் பின்னணியில் பிளவுக்கு இடமேற்படும். உணர்ச்சிவசப் படுவதால் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

தனு: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

மகரம்: குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும். குன்றென நிமிர்ந்து நிற்பீர் குவிந்திடும் புகழும்.

கும்பம்: சுகபோகதினம், சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். ஆடம்பரமான ஆடைகளில் வனநாடகம் செல்லும். படித்தவர்களின் தொடர்பினால் பயனடைவீர்கள். எல்லாம் இன்பமயம்.

மீனம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித் தரலாம். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## கத்தியுடன் கோவிலுக்குச் சென்றவருக்கு அபராதம்

[யாழ்ப்பாணம்]

ஆலயத்திற்குக் கத்தியுடன் சென்றவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவருக்கு 20 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ் மருத்திரத்துறை வீதியைச் சேர்ந்த செ சச்சிதானந்தன் என்பவர் இம்மாதம் 17ந் திகதி நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குக் கத்தியுடன் சென்றபோது, அங்கு பாதுகாப்புச் சேவையிலிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 24ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி திரு. இராஜசிங்கம் அவருக்கு 20 ரூபா அபராதம் விதித்தார் அபராதம் செலுத்தத் தவறினால் இரண்டு வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி தீர்ப்பு வழங்... [...]

## பெயர்மாற்ற...

3-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்ற பிரேரணையை கொண்டுவர திரு மரியாம்பிள்ளை முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்.

புகையிரத நிலையத்திலிருந்து கடற்கரைவரை அமைந்திருக்கும் வீதியை அமரர் ஜி ஜி நினைவாக 'ஜி ஜி பொன்னம்பலம் வீதி' என மாற்ற வேண்டுமென்று திரு. யோ. அ. செல்வநாயகம் சபையில் கொண்டுவரவிருந்த பிரேரணையும் ஒத்திவைக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை நகர முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்க ஒப்புவதாக திரு. செல்வநாயகம் கூறினார்.

பெயர் மாற்றம், பெயர் சூட்டுதலில் பிரச்னை இருப்பதால், இந்நிரலிலுள்ள மற்றொரு பிரேரணையையும் ஒத்திவைப்பது நல்லது என நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தெரிவித்தார். இதன்படி திரு. மரியாம்பிள்ளை யாழ் திறந்தவெளி அரங்கு பெயர்மாற்றப் பிரேரணையையும் ஒத்திவைத்தார். [ச]

## என்ன தடைவந்தாலும் — பாக். அணு ஆயுதங்களை தயாரித்தே தீரும்

### ஜனாதிபதி ஹக் உறுதி

லாகூர், ஆக. 29

என்ன தடை ஏற்பட்டாலும் சமாதானத் தேவைகளுக்காக பாகிஸ்தான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல்ஹக் தெரிவித்துள்ளார்.

லாகூரில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் பேசுகையிலேயே ஜெனரல் ஹக் மேற்கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள வளங்கள் அற்றுப்போகுமுன்னர் அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார். [இ]

